
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1306

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

130

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




## உணவகங்களில்கூட பேதம் பார்ப்பதா?

‘கோவை மாவட்ட திராவிடர் கழக 6-வது மாநாடு’ பொள்ளாச்சியில் உள்ள நாராயண டாக்கீஸ் தியேட்டரில், 23.12.1945 அன்று பேராசிரியர் க.அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. கோவை, ஈரோடு, திருப்பூர், தாராபுரம், உடுமலை, மேட்டுப்பாளையம், உதகமண்டலம், பழனி உள்ளிட்ட மேற்கு மண்டலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமானோர் முதல் நாளே மாநாட்டிற்கு வந்துவிட்டனர். அன்று காலை, பெரியார் மற்றும் பல முன்னணித் தலைவர்கள் புகைவண்டி நிலையத்திற்கு வந்திறங்கியபோது, ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உணர்ச்சிப் பெருக்கோடு கூடி, வாழ்த்தொலிகளை எழுப்பி, தலைவர்களை வரவேற்றனர்.

கருப்புச்சட்டைத் தொண்டர்களின் அணிவகுப்புடன், நகரின் முக்கிய தெருக்கள் வழியாக ஊர்வலம் சென்று தேர்முட்டி மைதானத்தில் நிறைவுற்றது. அங்கு அமைக்கப் பட்டிருந்த மாநாட்டுப் பந்தல் முன்பாக, தொண்டர்கள் முழக்கமிட, என்.அர்ச்சுனன் தராசுக்கொடியை ஏற்றிவைத்தார்.

காலை 11:00 மணிக்கு மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கின. கொடியேற்றி வைத்த அர்ச்சுனன் முதலில் சொற்பொழிவாற்றினார். மாநாட்டைத் திறந்துவைத்த தந்தை பெரியார், கூடியிருந் தோரின் பலத்த கைதட்டலுக்கு இடையே, ‘திராவிடர் கழகத்தின் கொள்கை’, ‘காங்கிரஸ் தோன்றிய வரலாறு’, ‘தன்மானம் தலைதூக்க திராவிட மக்கள் செய்யவேண்டிய வேலைகள்’ என்னென்ன என்பன பற்றி, சுமார் 2 மணி நேரம் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

பி.கே.கிருஷ்ணசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அதன்பிறகு, மாநாட்டுத் தலைவராகப் பேராசிரியர் க.அன்பழகன் தேர்ந்தெடுக்கப்பட்டதும், மதிய உணவுக்காக மாநாடு கலைந்தது. மீண்டும், மாலை 3 மணிக்கு மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கியதும், பேராசிரியர் தனது முன்னுரையை ஆற்றினார். அதன்பிறகு, நாவலர் நெடுஞ்செழியன் ‘திராவிட நாட்டுப் பிரிவினை’ குறித்துச் சொற்பொழிவாற்றினார். அப்போது, கொலை வழக்கு ஒன்றில் சிறையில் இருந்த கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், பாகவதர் ஆகிய இருவரையும் அரசு விடுதலை செய்ய வேண்டும் என்ற திருச்சி மாநாட்டுத் தீர்மானத் தை ஆதரித்து, இம்மாநாட்டிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், ‘உணவு விடுதிகளில் பேதம் பார்க்கும் கடைகளுக்கு சர்க்கார், லைசென்ஸ் கொடுக்கக் கூடாது’ என்றும், ஒரு தினசரி பத்திரிகையை ஆரம்பிக்கும்படி பெரியாரைக் கேட்டுக்கொண்டும், ‘கருப்புச் சட்டைப் படையில் இளைஞர்கள் ஏராளமாகச் சேர வேண்டும்’ என்றும் பல தீர்மானங்கள் இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

மாலையில், மாநாட்டுத் தலைவர் முடிவுரைக்குப் பிறகு, மாநாட்டுச் செயலாளர் பி.என்.ராமானுஜம் நன்றியுரை கூற, மாநாட்டு நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அதன்பிறகு மாலை 7 மணிக்கு மயிலம் சந்தைப்பேட்டையில் அர்ச்சுனன் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர், பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற னர். சுமார் 2 மணி நேரம் பெரியார் சொற் பொழிவாற்றிட, இரவு 10.30 மணிக்கு கூட்டம் கலைந்தது.

**...கூட்டம் திரளும்**

## சிதையும் சமூக ஒழுங்கு: ஓர் எச்சரிக்கை மணி!

மகாராஷ்டிர மாநிலம் ஜால்னா மாவட்டத்தில், கடந்த மே 23 அன்று, ‘பசு பாதுகாவலர்கள்’ என்கிற கும்பல் நிகழ்த்திய கொடூரச் சம்பவம், தற்போது சமூக வலைதளங்களில் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. பரமேஷ்வர் சுஹாஸ் ஹிவாலே என்ற பட்டியலின விவசாயி, ஒரு சந்தையில் இருந்து ஒரு காளையை வாங்கிக்கொண்டு, தனது 11 வயது மகனுடன் சென்றுள்ளார். அவர்களது வாகனத்தை வழிமறித்த, ‘பஜ்ரங் தளம்’ மற்றும் ‘பசு பாதுகாப்பு அமைப்பை’ச் சேர்ந்ததாகக் கூறிக்கொண்ட கும்பல், அந்தக் காளையை ஒரு இஸ்லாமிய இறைச்சிக் கடைக்காரரிடம் விற்க, ஹிவாலே திட்டமிட்டுள்ளதாகக் குற்றம் சாட்டி, அத்துமீறலில் ஈடுபட்டுள்ளது.

ஹிவாலே, மாட்டை வாங்கியதற்கான ஆவணங்களைக் காட்டிய போதிலும், அந்தக் கும்பல் அவரது பெயரையும் சாதியையும் கேட்டு, சாதியரீதியாகத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. மேலும், பலவந்தமாக அவரது வாயில் சாணத்தைத் திணித்து, அசிங்கப்படுத்தியுள்ளனர். அவரது மகனையும் தாக்கியுள்ளனர். ‘இந்தத் தாக்குதலை, வீடியோ எடுத்த குற்றவாளிகள், இதுகுறித்து போலீஸாரிடம் புகார் அளித்தால், கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்’ என மிரட்டியுள்ளனர்.

தற்போது, கொடூரத் தாக்குதல் வீடியோ இன்ஸ்டாகிராமில் வைரலானதை அடுத்து, ஆகஸ்ட் 27 அன்று ஹிவாலே காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். அதன் அடிப்படையில், 6 நபர்கள்மீது போலீஸார் வழக்குப் பதிவுசெய்து தீவிர விசாரணை நடத்திவருகின்றனர். ‘பசு பாதுகாப்பு’ என்ற பெயரில் சட்டம் ஒழுங்கைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு, அப்பாவி மக்கள்மீது வன்முறையை ஏவும் சம்பவங்கள் வடமாநிலங்களில் தொடர்ச்சியாக அதிகரித்துவருகின்றன.

தற்போதும், ஒரு சிறுவனின் முன்னிலையில் அவனது தந்தைக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதி, மனிதநேயமற்ற செயலின் உச்சமாகும்.

சமூக ஒழுங்கைச் சீர்குலைக்கும் இத்தகைய சம்பவங்கள், ஏதோ தற்செயலாக நடப்பவை அல்ல; மாறாக, திட்டமிட்ட முறையில் சமூகத்தில் பிரிவினையையும் பயத்தையும் உருவாக்குவதற்காக நிகழ்த்தப்படுபவை ஆகும். மதவாதக் கும்பல்களின் அத்துமீறல் எந்த அளவிற்குச் சமூக ஒழுங்கைச் சீர்குலைக்கும் என்பதற்கு, இந்தச் சம்பவம் ஓர் எச்சரிக்கை மணி. ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பறிக்கும் இதுபோன்ற மதவாத சக்திகளை சட்டத்தின் முன் நிறுத்தி, இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்.


# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

130

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## அவதூறுகளை எதிர்கொள்ளும் ஆயுதம்!




‘முரசொலி’ பாசறைப் பக்கத்தில் பல்வேறு தொடர்களை எழுதிவந்த ஊடகவியலாளர் ந.வினோத்குமார், உடல்நலக் குறைவு காரணமாக, அண்மையில் அகால மரணம் அடைந்தார். திராவிட இயக்க ஆய்வுக்கு, அவர் ஆற்றிய பல்வேறு பங்களிப்புகளில் கலைஞர் நூற்றாண்டு சிறப்பு வெளியீடாகத் ‘தமிழரசு கலைஞர்: செய்திகள்-சிந்தனைகள்-சாதனைகள்’ எனும் நூலை எழுதி வெளியிட்டது குறிப்பிடத்தக்க ஒன்று. பரிசல் பதிப்பகம் அந்நூலை வெளியிட்டுள்ளது.

1969-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா மறைவுக்குப் பிறகு, முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சர் பொறுப்பை ஏற்கிறார். அப்போது, தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் சார்பாக, ‘பாக்கியலட்சுமி’, ‘சௌபாக்கியம்’, ‘மேழிச்செல்வம்’, ‘இன்காம்’, ‘ஆரோக்கிய மார்க்கம்’, ‘மெட்ராஸ் ஹெல்த் எஜுகேஷன்’ மற்றும் ‘சீரணி (கிராம நலம்)’ என 7 பருவ இதழ்கள் வெளியாகின. தலைவர் கலைஞர், அவற்றையெல்லாம் ‘தமிழரசு’ என்ற பெயரில், மாதம் இருமுறை வெளியாகும் இதழாக, 1970 ஜூலை 1 முதல் வெளிவர வழிவகுத்தார். இன்றைக்கும் அரசு துறை வாரியாக செய்திக் குறிப்பு களைத் தாங்கி வெளிவந்து கொண்டிருக்கிறது தமிழரசு.

கலைஞரின் ஆட்சிக் காலத்தில் இந்த இதழ் வெகுஜன தன்மைகொண்ட ஆய்விதழ் என்றும் மெச்சும் அளவுக்குப் படைப்புகளைக் கொண்டு வெளியானது. கலைஞர் நூற்றாண்டின்போது, எழுத்தாளர் வினோத்குமார் ‘தமிழ் மின் நூலகத்தில்’ பதிவேற்றம் செய்யப்பட்ட பழைய இதழ்களை எல்லாம் புரட்டிப்பார்த்து, அவற்றில் புதைந்து கிடந்த மாணிக்கங்களை, 100 கட்டுரை களாக எழுதினார். பின்னர், ‘செய்திகள் - சிந்தனைகள் - சாதனைகள்’ எனும் தலைப்புகளின்கீழ், அவற்றைத் தொகுத்து நூலாக்கினார்.

இதில் உள்ள அனைத்துக் கட்டுரைகளும் கலைஞர் ஆட்சியில் நடைபெற்ற ஒரு புதிய தகவலைக் கொண்டி ருப்பது தனிச் சிறப்பு.

இயல், இசை, நாடகம் எனும் ‘முத்தமிழின் வித்தகர்’ என்பதால், கலைஞர் அவர்களை ‘முத்தமிழறிஞர்’ என்கிறோம், அவர் சிற்பத் தமிழிலும், கட்டடத் தமிழிலும் ஆற்றலும் ரசனையும் கொண்டவர் என்பதால், சிற்பி டாக்டர். வை.கணபதி ஸ்தபதி அவர்கள், கலைஞரை ‘ஐந்தமிழ் அறிஞர்’ என்று கூறி இருக்கிறார்.

இதைப் போலவே, கலைஞர் தமிழ்நாட்டு மக்களுக்குத் தந்த மூன்று விதமான ஒளிகளாக ‘மின்னொளி, அறிவொளி, கண்ணொளி’ என்பதை, நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் சுட்டிக் காட்டி பேசிய குறிப்புகளை இதில் கவனப்படுத்தியுள்ளார், நூல் ஆசிரியர். இப்படிப் புரட்டும் பக்கங்கள் எங்கும் புதிய செய்திகள் காணக் கிடைக்கின்றன.


ந.வினோத்குமார்

‘கலைஞர் மீதும் அவரது ஆட்சியின் மீதும் அவதூறுகள் பரப்பப்படும் இந்தச் சூழலில், அவற்றை எதிர் கொள்ள இந்தப் புத்தகம் ஏதேனும் ஒருவகையில் ஆயுதமாகப் பயன்பட்டால், அதைவிட பெருமகிழ்ச்சி எனக்கு வேறில்லை’ என்று அறிமுக உரையில் நூல்ஆசிரியர் எழுதி இருப்பார். அவதூறுகள் உள்ள வரை அவற்றை எதிர்கொள்ளும் ஆயுதமாகத் ‘தமிழரசு கலைஞர்’ நூலை வழங்கிச் சென்றிருக்கும் ந.வினோத்குமாரும் நினைவு கூரப்பட்டுக்கொண்டே இருப்பார்.

> **அவதூறுகள் உள்ள வரை அவற்றை எதிர்கொள்ளும் ஆயுதமாகத் ‘தமிழரசு கலைஞர்’ நூலை வழங்கிச் சென்றிருக்கும் ந.வினோத்குமாரும் நினைவுகூரப்பட்டுக்கொண்டே இருப்பார்.**

**...வாசிப்போம்.**

# ஃப்ளாஷ்பேக்


ஏ.டி.மணி



## விருப்பமும் ஆதரவும், தலைவர் முடிவும்!

2006-ஆம் ஆண்டு சட்ட மன்றத் தேர்தலில், கழகத்தின் சார்பில் போட்டியிட நெல்லை ஆலங்குளம், சென்னை ஆர்.கே.நகர் ஆகிய தொகுதிகளுக்கு விருப்ப மனு தாக்கல் செய்திருந்தேன். அதையொட்டி சமுதாய அமைப்பினர் சந்தித்து, தலைவரிடம் ஆதரவு தெரிவித்தனர். தலைவர் அவர்கள், ‘ஆலங்குளத்தில் பூங்கோதை அவர்களை நிறுத்தலாம், உங்க விருப்பம் என்ன?’ எனக் கேட்டார். “உங்கள் விருப்பம்தான் தலைவரே, நாங்கள் ஆதரவளிக்கிறோம்” என்று சமுதாய அமைப்பினர் கூறினர். அடுத்த நாள், ‘முரசொலி’யில் இந்தப் படத்துடன் ‘நெல்லை நாடார் மகாஜன சங்கம்’ கழகத்திற்கு ஆதரவு எனச் செய்தி வெளியிட்டார் தலைவர். தலைவரின் முடிவை ஏற்று, கடமையாற்றுவதுதான் தொண்டனாக என்றும் மகிழ்ச்சி என்பதை உணர்த்தும் படம்.

**– ஏ.டி.மணி,
தண்டையார்பேட்டை, முன்னாள் பகுதிச் செயலாளர்,
ஆர்.கே.நகர் மேற்கு, சென்னை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# கருவூலம்

## சிறையில் இருந்தபடியே குறிப்புகள்!

1976-ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் கழக ஆட்சி கலைக்கப்பட்ட அடுத்த நாளான 1976-ஆம் ஆண்டு பிப்ரவரி 1 அன்று, முரசொலி மாறன், மு.க.ஸ்டாலின், ஆற்காடு வீராசாமி உள்ளிட்ட முன்னணித் தலைவர்கள் ‘மிசா’ சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு, சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

சிறையில் இருந்த முரசொலி மாறன், நாடாளுமன்ற விதிகளையும் தமக்கு இருந்த சில சட்டப்பூர்வ உரிமை களையும் பயன்படுத்தி, வெளியில் இருந்த தி.மு.க. எம்.பி.க்களுக்கு ரகசியக் குறிப்புகளையும், நாடாளுமன்றத்தில் எழுப்பவேண்டிய கேள்விகளையும் எழுதி அனுப்பினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900